**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 310/2022</u>**
**<u>நாள் 21/01/2026 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – விஜய் (PW1) | த/பெயர் – ரத்தினம் |
| வயது – 36 | தொழில் – |
| விலாசம் – | |

**<u>முதல் விசாரணை–</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). விபத்து பதிவேடு நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உாிமம் நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). மருத்துவ விடுப்பு அறிக்கை அசல் 3 எண்ணிக்கை **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). மருத்துவ ரசீதுகள் அசல் **ம. சா ஆ 7** ஆகவும்,

(8). கதிரியக்கபடம் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). மனுதாரரின் ஆதார் அட்டை நகல் **ம.சா ஆ 9** ஆகவும்,

(10). மனுதாரரின் புகைப்படம் **ம.சா ஆ 10** ஆகவும்,

(11). மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 11** ஆகவும்,

(12). மனுதாரரின் பணி அடையாள அட்டை நகல் **ம.சா ஆ 12** ஆகவும்,

(13). மனுதாரரின் சம்பள ரசீது பதிவிறக்க நகல் **ம.சா ஆ 13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. என்னுடைய வயது மற்றும் சம்பளம் குறித்த அசல் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 22.08.2022ம் தேதியன்று நடந்தது. விபத்து எந்த இடத்தில் நடந்தது என்றால் பழவேற்காட்டில் இருந்து ஆரம்பாக்கம் செல்லும் வழியில் அரசூர் அருகே செஞ்சிலட்சுமி ரைஸ்மில் அருகில் நடந்தது. பழவேற்காடு பிரதான சாலை என்றும் இரு பேருந்துகள் செல்லும் அளவு சாலை இருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்து அரசூர் செல்வதற்கு 12 அடி சாலை தான் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் ஸ்பிளன்டர் பிளஸ் வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான்.

2. நான் குறுகலான சாலையில் அஜாக்கிரதையாக ஓட்டி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரே வந்த வாகன ஓட்டுநருக்கும் மேற்படி விபத்தில் காயம் ஏற்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விபத்து நடந்தவுடன் மயக்கம் வந்ததா என்றால் இல்லை, தெளிவாக தான் இருந்தேன்.

விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியும் TN 18 BC 9339 ஆகும். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றும் நான் தான் அதிவேகமாக சென்று அவருக்கு விபத்தை ஏற்படுத்திவிட்டு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சொர்ப்ப காயம் தான் ஏற்பட்டது என்றும் நான் அதிகபடியான இழப்பீடு கேட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணிந்திருந்தேனா என்றால் அணிந்திருந்தேன். காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் தந்தை கொடுத்தார். 5 நாட்கள் காலதாமதமாக தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் TPI என்ற தனியார் நிறுவனத்தில் டெக்னிசியனாக வேலைபார்த்து வந்தேன். என்னுடைய மாதவருமானம் 34,000/– ரூபாய் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள சம்பள ரசீதில் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் நிறுவனத்தில் சம்பள ரசீதை PDF–ல் தான் அனுப்புவார்கள் அதை தான் பதிவிறக்கம் செய்து தாக்கல்செய்துள்ளேன். நான் தற்போதும் அதே நிறுவனத்தில் தான் வேலைபார்த்து வருகிறேனா என்றால் இல்லை. விபத்து நடந்தபின்னர் வேலைக்கு செல்லவில்லை. தற்போது வீட்டில் தான் உள்ளேன்.

4. விபத்தில் எனக்கு என்ன காயம் ஏற்பட்டது என்றால் வலது காலில் முட்டியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பொன்னேரி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை செய்துக்கொண்டு பின்னர் மேற்சிகிச்சைக்காக சவிதா மருத்துவமனையில் சேர்ந்தேன்.

மருத்துவ காப்பீடு மூலம் மருத்துவ செலவுகள் அனைத்தும் பெற்றுவிட்டேனா என்றால் சுமார் 2,50,000/- ரூபாய் வரை செலவானது அதில் ரூபாய் 70,000/- மட்டுமே மருத்துவ காப்பீடு கிடைத்தது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 3ம் நபருக்கான காப்பீடு இல்லை என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதார், விபத்தில் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மட்டும் தான் இழப்பீடு பெற தகுதியானவர் என்றும் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திடம் தான் இழப்பீடு பெறமுடியும் என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் இருந்து 2ம் எதிர்மனுதாரர் விடுவிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**